RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s2038

# தனிப்பாடல் திரட்டில் குடும்பம்

**ம. ஷீலா [அ, *]**

[அ] தமிழ்த்துறை, இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக்கல்லூரி, செங்கல்பட்டு-603001, தமிழ்நாடு, இந்தியா

# Family in Solo Collection

**M. Sheila [a, *]**

[a] Department of Tamil, Rajeswari Vedachalam Government Arts College, Chengalpattu-603001, Tamil Nadu, India

* Corresponding Author: lalithampika1968@gmail.com

Received: 26-06-2022
Revised: 30-09-2022
Accepted: 08-10-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

Man enjoys living as a society. He realized that the whole of his life is to live around relationships. Marriage lays the foundation for living as a family. Love, character, and giving up will not only make the life of both husband and wife but also the family live. On the contrary, externality and immorality make life miserable. Just as marriage determines one's social status, so the singularity of relationships also determines well-being. Contradictions cause misery and destruction. The benefit of wealth can be embraced. This is one of the duties of engaging in domesticity. Feasting and offering something to each other are also family natures. These are also the defining elements of human culture.

**Keywords:** Solo Collection, Family, Reslationships, Culture

## முன்னுரை

உலகில் வாழும் உயிர்கள் தனிமையில் இனிமை கண்டாலும், பிறவுயிர்களுடன் இணைந்து வாழ்வதையே விரும்புகின்றனர். மனிதனும் இதற்கு விலக்கல்ல. பிறவுயிர்களுடன் கொள்ளும் உறவே அவனை மனிதனாக்குகின்றது வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையை உருவாக்குகின்றது. இந்த இணைந்த வாழ்க்கையில் குடும்பம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்குடும்ப வாழ்க்கையில் அன்பு, பாதுகாப்பு, பிறவுயிர்களின் மீது கொள்ளும் நேசம், பொறுப்பு எனப் பரந்து அவனுக்கு வாழ்க்கையைப் புரிய வைக்கின்றது அழகாக்குகின்றது. குடும்பம், உணர்வுகள், உறவுகள் அவன் சமுதாயமாக வாழ துணை செய்கின்றது பயிற்சியளிக்கின்றது.இவ்வகையில் தனிப்பாடல்திரட்டு மொழியும் குடும்பம் பற்றி நாம் இங்குக் காணலாம்.பல்லார் பாடிய பாக்களின் தொகுப்பாதலின் பல்கலைக்கழகமென பல்பார்வையில் குடும்பம், உறவுகள் பற்றிய செய்திகள் உள்ளதால் இதுபற்றிய ஆய்வு தற்காலத்துக்கும் உரியதாகின்றது.

## குடும்பம்

சமூகம் சார்ந்த அமைப்பே குடும்பம். பல உறவுகளின், உணர்வுகளின் இணைவு மற்றும் முரண்களென இங்கு பல அனுபவங்களை நாம் சந்திக்கலாம். "குடும்பம் என்பது சமூகத்தின் இயல்பானதும் அடிப்படையானதுமான குழு அலகாகும் என்பதுடன் அது சமூகத்தாலும், தேசத்தாலும்பாதுகாக்கப்படுவதற்குத் தகுதி பெற்றுள்ளது" என்றும், "சமூகவியல் தேவைகள் மற்றும்

மனித உற்பத்திகள் ஆகியவை நிறைவு செய்யப்பட அமையும் மக்கள் தொகுதி குடும்பம்" (அரங்க. சுப்பையா, 2003) என்பதும் குடும்பம் பற்றிய சில வரையறைகளாம்.

## தனிப்பாடல் திரட்டு

பல்லார் பல சூழல்களில் பாடிய உதிரிப் பாடல்களின் தொகுப்பே தனிப்பாடல் திரட்டாகும். இலக்கியம் என்பது வாழ்வுடன் பிணைந்ததே 'தமிழோடு கலந்ததே வாழ்வென்பதை' நிரூபிப்பதே போல அமைவனவே இந்த தனிப்பாடல் திரட்டின் பாடல்கள். வாழ்க்கையின் சிறுசிறு அனுபவங்களும் , சுவை வேறுபட்ட பாடல்களும்,நடைமுறை வாழ்வை வெளிச்சமிடும் பாக்களும்,புராணங்களை மீளாய்வு செய்யும் பாக்களும் என பல் நிலைகளிலான அனுபவப் பாக்களும் இதில் உள்ளன.இத்திரட்டில்32 புலவர்கள் பாடிய 636 பாக்கள் உள்ளன. 3 இவற்றில் சில சங்கப்பாக்களாகவும், பக்தி இலக்கிய பாக்களாகவும் உள்ளன.

## தனிப்பாடல் திரட்டும் குடும்மும்

குடும்பங்கள் என்பன உறவுகளால் சூழப்பட்டனவாம். குடும்பம் பற்றிய செய்திகள் இதில் குறைவெனவே கூறலாம். குடும்பம் என்பதில் கணவன், மனைவி என்னும் இருவர் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

திருமணம் என்பது ஒருவர் வாழ்க்கையை முழுமையாக்கும் செயலாகும். இதை வீட்டிற்கு அடங்காது இருக்கும் இளைஞர்கள் பற்றிக் கூறுகையில் 'ஒரு கால்கட்டுப் போட்டா சரியாயிடும்' என்பதாலும் உணரலாம். இதனையே பலபட்டடை சொக்கநாதரும் சொக்கர்-உமை திருமணம் பற்றிக் கூறுகையில்,

"சொக்கர் கைத்தாலிக் குநீதுணிந்து

கண்டத்தை நீட்டினையே"

என்கிறார் (Kanniyappan, 2016). பெண்மையின் மென்மையில், ஆண்மையின் வன்மை இணங்கி நிற்பதை சிவபிரானின் வலியதிருமேனியும் குழைந்தது என்பதனாலும்

"மாக்கைக் கிரங்கும் குருகும் வளர்சக்ர வாகப் புள்ளும்

தாக்க சரபம் குழைந்தது எவ்வாறு"

மலை, மண்என யாவற்றுக்கும் அடங்காது பாய்ந்து வந்த கங்கையானவள் சிவபெருமானின் சடாமகுடத்தில் அடங்கியதைச் சுட்டும் காளமேகப் பாடல்களால் ஆணும், பெண்ணும் இயைந்து இருந்தாலே குடும்பம் நல்லறமாய் விளங்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். பொற்களந்தை படிக்காசு தம்பிரானும் முருகனைப் பார்த்து உன் அன்னை உனக்குப் பாராட்டி, மையிட்டு, மூக்குத் துடைத்து காது கிள்ளிய பாலகனல்ல நீ இப்போது தெய்வயானை, வள்ளியென இருவரை மணந்தமையால் பெரியவனாதலின்' நீ என்னைக்காவாதது ஏனோ?' என்கிறார் (Kanniyappan, 2016).

திருமணம், பொறுப்பு என்பன அன்பாலும், தம் கடமையை உணர்வதாலும் வருவனவாம். ஆனால் திருமணம் என்பது இருவரை மட்டும் சார்ந்தது அன்று. இந்து பாரம்பரியத்தில் அது இரு குடும்பங்களின் இணைப்புமாகும். அது சமுதாய மதிப்பை, மரியாதையை அடிப்படையாகக் கொண்டது. இந்த உலக நடைமுறையைச் சுட்டுவார் போல் காளமேகமும் புள்ளிருக்குவேளூர் வைத்தீசுவரன், தன் மகன் குறமகளை மணந்தான் என்றதும் நஞ்சைக் குடிக்க, தாயோ தவம் செய்யவென போய்விட்டாள் தாய்மாமனோ (திருமால்) உடல் கருக வருந்தியவன் மண்ணைத் தின்னலானான் பிரமனோ முகத்தைத் தொங்கவிட, பிறகடவுளர்களோ செய்வதறியாது, இமையாத கண்களையுடையவர்களாய் இரவு பகல் தூங்காதவர்களானார்கள் என மொழிகின்றார் (Kanniyappan, 2016).

திருமணம் நடக்க நற் குடும்பம், உறவுகள் தேவை. இதனைச் சுட்டுவார் போல் விநாயகருக்குப் பெண் கிடைத்தல் அரிது எனச் சுட்டுவார் போல் கவி குடும்ப உறவுகளின் நிலையைக் காட்டுகின்றார். 'விநாயகரே உமக்கு வீரம் இருக்கலாம். ஆனால் தந்தை சிவபெருமான் காபாலியாய் மண்டையோட்டைக் கையில் ஏந்தி அலைகின்றான் தாய்மாமன் திருமால் (கண்ணன் வெண்ணைத்) திருடன் வாழும் இடமோ சுடுகாடு இளைய தம்பி முருகனோ கடம்பன் (தாழ்ந்த சாதி பெயர்) உன் தாயோ நீலி (நீலநிறமுடையவள்) உனக்கோ பெருவயறு. இதனால் உனக்குப் பெண் தர யோசிப்பர் எனகுடும்பச் சூழலை -உறவைக்கூறி திருமணம் தாமதமாக-நடக்கா நிலைக்கான காரணங்களாக அந்தகக்கவியார் சுட்டுகின்றார் (Kanniyappan, 2016).

திருமணம் எனும் போது சீர்வரிசைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பாரி மகளிர்மணத்திற்காய் ஒவையார் பாடிய பாக்கள் இதனையே கூறுகின்றன. வருணனிடம் நீர் மழைக்குப்பதில், பொன்மழையாகப் பெய் (215) என்றும் பெண்ணை நதியிடம் நீராய் வராமல் நெய், பாலாக வா (216) என்றும் கூறுவதால் உணரலாம்.

சீர் என்பது திருமணத்தோடு முடிந்து விடுவதன்றுஆயுள் முழுவதும் தொடர்வதே என்பதே வாழ்க்கையில் பிரச்சனை என ஒன்று வந்து விட்டால் மாமியார் வீட்டுக் கதவை தட்டும் அவலத்தைத் திருமால் பற்றிய பாடல் ஒன்று விளக்கும். திருமாலின் பாற்கடலைப் பாலுக்கழுத வியாக்கியபாதர் மகவாய உபமன்யுவுக்கு வழங்கியதால், திருமால்

"......என்னை

இடுக்கடி பாயைச் சுருட்டடி

யேகடி அம்பலத்தே"

என்கிறார். சிறு பிரச்சினையானாலும் பெண்ணின் வீட்டில் சுமையேற்றும் சாதரண மக்களின் மனநிலையை வெளிப்படுத்துவது போல் இப்பாடல் அமைந்துள்ளதாம் (Kanniyappan, 2016).

## கணவன் -மனைவி உறவு

கணவன், மனைவியர் என்னும் இருவரும் இனிய பேச்சுக்கள் பேசுபவராய் விளங்க வேண்டும். அவர்களுக்கு இடையேயான இன்ப, இனிய உறவுக்குக் கேலிப்பேச்சுக்கள் உதவுவதுடன், உணர்வுகளை வெளிப்படுத்தி, உறவுகளைப் பலப்படுத்தவும் பயன்படும். இதனை அரன்-அம்பிகை உரையாடல்கள் வழி உணரலாம். ஆயின் இக் கேலிப்பேச்சுக்கள் உப்புப் போலிருந்தாலே உறவுகள் பலப்படும். அல்லாவிடில் விபரீதமேயாம். ஆயின் இதன் பயனாய குடும்ப நிலையைக் கூறுவாராய்ப் பலபட்டடை சொக்கநாத புலவர், இருவரும் (அரன்-அம்பிகை) அன்பில் பிணைந்து இருக்கையில் என் குறைகளைக்கூறக்கூடாதா என்கிறார்.

"ஆயமுத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் னருகிருந்து

நீமுத்தந் தாவென் வர்கொஞ்சும் வேளையினித்த நித்தம்

வேய்முத்த ரோடென் குறைகளெல் லாமெல்ல மெல்லச் சொன்னால்

வாய்முத்தஞ் சிந்தி விடுமோ நெல்வேலி வடிவன் னையே"

குடும்பம், இல்லறம் என்பதுஇன்பம் அனுபவிப்பதற்கு மட்டும் உரியதன்று. அது சுற்றம், உறவுகளைப் புரத்தலுமாம். குறையிலா மனிதர்கள் இலௌலை என்பதை உணர்ந்து, உணர்த்தி அவர்களும் மகிழச் செய்ய வேண்டும் என்பதை உணர்த்துவது போலுளதாம் (Kanniyappan, 2016).

கணவன், மனைவி எனும் இருவர் இயைந்ததே குடும்பமாதலின், அவர்கள் மகிழ்வு நல் குடும்ப அடையாளமாம். காளிமுத்துப் புலவரும் தன் மனையாளின் மகிழ்வின் பொருட்டு கண்ணன் வானைப் பிளந்து மேலேறிச் சென்று மணமிக்க தேவதாரு மரத்தைக் கொண்டு வந்தார் (449) என்று கூற இதனையே காளமேகரும்.

"காவை காதல் நட்பினுக்காய்

புள்ளால்"

கொண்டு வந்ததாகக்கூறுவார் (Puliyur Kesigen, 2010). பெண் மனையாள் வரமாய்த் திகழ்வதை 'பானை பிடித்தவள் பாக்கியசாலி' எனும் வழக்கு, சொல்லாட்சி ஒன்றும் உணர்த்தும். சிவபெருமான் பற்றி மொழியும் பலபட்டடை சொக்கநாதர் பாடலொன்றும்,'யானை உரித்துப் போர்த்தவர் பிரம்படிபட்டவர் (மாணிக்கவாசகருக்காக) பிச்சையேற்று அலைந்து திரிந்தவர் இத்தகையவர் ஞானம் பெற்று வாழ்வது எல்லாம்,

"சொக்கநாயகியாள்

பானைபிடித்த முகூர்த்தத்தி னால்வந்த பாக்கியமே"

ஒருவர் துயர் மற்றவரை பாதிப்பதை, காளமேகம் அம்பிகை உலா பற்றிக் கூறும் பாடல்வழி உணரலாம். அன்ன வாகனத்தில் மீனாட்சி உலாவரும் அழகுக் காட்சியைக் காண்கையில், 'திருமாலும் துதிக்கும் சொக்கர் பித்து கொண்டவராதலின் மீனாட்சி அன்ன வாகனத்தை விட்டு இறங்காது (உலா)தெருவில் அலைகின்றாள் என்பார் (Kanniyappan, 2016).

## குடும்பம், பொறுப்பு

குழந்தை பிறந்த பின் கணவன், மனைவி என்னும் இருவர் தந்தை, தாய் எனும் நிலையை அடைவதால் பொறுப்பும் அதிகமாம். இதனை விளக்கும் காளமேகர் பாடல் ஒன்று,

"ஆடுந் தியாகரே ஆட்டமேன் தானுமக்கு

வீடுஞ் சமுசார மேலிட்டுக்-கூடிச்

செருக்கி விளையாடச் சிறுவர்இரண் டாச்சே

இருக்குமூர் ஒற்றியாச் சே"

சம்சாரியாகி, இரண்டுப் பிள்ளைகளும் ஆனபின், இருக்கு. இடமும் ஒற்றியும் ஆன பின் இந்த ஆட்டம் தேவையா என்கிறார் (Kanniyappan, 2016).

## குழந்தை செயல்கள் மகிழ்வே

குழந்தை குறும்புகள் பெற்றோருக்கு மகிழ்ச்சியைத் தருவதை சிவப்பிரகாசர் காட்டும் தெய்வக் குடும்ப நிகழ்வாலும் அறியலாம். விநாயகன் தந்தையாம் சிவபெருமானிடம் வந்து தம்பி ஆறுமுகன் என் காதைக் கிள்ளினான் என்று புகார் கூறக், அவனோ அண்ணன் என் கண்களை எண்ண ஆரம்பித்தான் என்று பதிலுக்குக் கூற, விநாயகனைப் பார்த்து தம்பியை ஏன் கேலி செய்தாய் என பெருமான் கேட்கவும், அவனோ இவன் என் தும்பிக்கையை முழமிட்டு அளந்தான் என்று கூற, முருகனோ கேலியாகச் சிரிக்க, மனையாளாம் உமையை நோக்கி உன் மக்களின் செயல்களைப் பாராய் என்று பெருமான் கூறவும் உமையானவர் விநாயகனை அன்புடன் அருகணைத்துக் கொண்டதாக அச் சித்திரம் செல்கிறது என்பது சுவையாம்.

## தாய்ப்பாசம்

குழந்தை மீது தாய் மிகுந்த பாசமுடையவள். பிறர் தன் குழந்தையை உற்றுப் பார்த்தாலே திருஷ்டி பட்டுவிடும் நோய் வந்து விடுமென எண்ணுவது தாய்மனம். டெல்லிக்கு ராஜாவானாலும்தாய்க்குப் பிள்ளைதான் அல்லவா...? ஆனால் குழந்தை தவறு செய்தால் கண்டிக்கவும் செய்கின்றாள்.குழந்தையை நல்ல மனிதனாக வளர்ப்பதும் அவள் கடமையன்றோ?கண்ணன்-யசோதை வழி காளமேகம் இதனை உணர்த்துவதும் நயமே. வெண்ணை திருடியதற்காக யசோதை கண்ணனை

மத்தாலே அடித்ததைக் கூறுகையில்,'திருமால், வேதம் கமழ் வாயன் வாமனாய் பூமியை அளந்தவன் என்றெல்லாம் பாராமல் தன் குழந்தை நற் பெயருடன் விளங்க வேண்டுமெனும் நினைப்பு உடையவளாய் அடித்தாள்-செயல்பட்டாள் என்கிறார்.

குழந்தை மீது துரும்பு பட்டாலும் கலங்கியவள் அவனைப் பிறர் அழித்தார் என்றால் தாங்குவாளா? மன்மதனைச் சிவபிரான் எரித்தபோது திருமகள்,

"விழுந்து நொந்து அயர்ந்து அழுது ஏங்கிக்

கைத்தல மலரால் மார்புறப் புடைத்தாள்"

திருமகன் துயரம் தாங்காது மார்பில் அடித்து அழுதமையாலே பாற்கடலில் தூசி எழுந்தது என்கிறார் (Kanniyappan, 2016).

## குழந்தை வளர்ப்பு

பெற்றோர் என்றால் இருவரைக் குறித்தாலும், கணவன், மனைவி என்னும் இருவர் குடும்பத்தில் இருப்பினும் தாயே குழந்தை வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கிறாள்.'தாயைப்போல பிள்ளை' என்பதும் உலக வழக்கு. குழந்தையின் முதல் ஆசிரியர் தாயே என்பதாலும் குழந்தையின் கல்வியில் தாயின் பங்கு முக்கியமாகக் குறிக்கத்தக்கது. பாரதிதாசனும்3

"கல்வி இல்லாத பெண்கள்

களர்நிலம் அந்நிலத்தில்

புல்விளைந் திடலாம் நல்ல

புதல்வர்கள் விளைதல் இல்லை"

என்றதும் ஈண்டு நினைத்தற்கு உரியது. கல்வியறிவு இல்லாத மகவைப் பெற்றவள் பாவியே என்பார் ஔவையும். தாய் தந்தையர்கள் குழந்தைக்கு அரண் போன்றவர்கள் (Bharathidasan, 1948).

தாய் தந்தையில்லாத குழந்தைகள் பிறரின் கேலிக்கும், ஏச்சுப்பேச்சுக்கே ஆளாவார்கள். இதனை பிறப்பிலியாய சிவபிரான் வாழ்க்கை நிகழ்வோடு ஒப்பிடுவார் காளமேகம்.

"வில்லால் அடிக்கச் செருப்பால் உதைக்க வெகுண்டொருவன்

கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கஇக் காசினியில்

அல்லார் பொழில் தில்லை அம்பல வாணற்கொ ரன்னைபிதா

இல்லாத தாழ்வல்ல வோவிங்ஙனேஎளி தானதுவே" (Kanniyappan, 2016)

சொக்கநாத புலவரும் இதனையே,

"சேராத வேடன் செருப்பா லடிக்கவுந் தீண்டவுந்தண்

ணீர்வா யுமிழவு முச்சிட்டம் போடவு நீண்டச்சிலைத்

தாரா லடிக்கவுங் கண்ணீர் ததும்பவுந் தாய்தமர்கள்

ஆரா கிலுமில்லை யோத்திருக் காளத்தி யப்பனுக்கே"

எனபெற்றோரும் உற்றாரும் சுற்றமும் இல்லாதால் தான் இப்படி நடக்கின்றன என்பதாலும் அறியலாம் (Kanniyappan, 2016).

பெண்குழந்தை வளர்ப்பில் தாய் மிகுந்த கண்டிப்பு காட்டுவாள். நாளை இன்னொருவர் வீடு சென்றுவாழ வேண்டியவள் ஒரு குடும்பத்தையே வழி நடத்த வேண்டியவள் வாழவைக்க வேண்டியவள். அத்தகையவள் துயருறின் அது பெற்றோர் கண்ணீருக்கே காரணமாகி விடுவதாலும், தன்னைப்போல் அவளும் நல்மனையாளாய், தாயாய் உறவுகள் சூழ வாழ விரும்புவதால் தயார்செய்

நிலையே தாயாரிடம் பெரும்பாலும் காணப்படும். எனவே 'கண்கொத்திப் பாம்பாக' மகள் நடவடிக்கைகளில் சிறுமாற்றம் கண்டாலும் தாய் எச்சரிக்கையாகின்றாள்.

மகள் தன் காதலனுடன் உடன் போனாளென என்றறிந்த தாய்க்குக் கோபம்வரினும் பாசம் முன்னிற்கின்றது என்றும் அவள் அவட்கு குழந்தையன்றோ? செல்லும் வழியில் அவள் எங்ஙனம் துன்பப்படுகின்றாளோ என்று நையும் நிலையைச் சவ்வாது புலவரும்,

"பாலையிலாள் பின்னங்காற் பஞ்சுளியென் றேசுளிப்பாள்

பாலையிலாள் பின்னென் படுவளோ"

எனத் துயர்படுகின்றாள் (Kanniyappan, 2016).

ஆண், பெண் மனதில் சலனமின்றி பழகினாலும் உலகம் பழியே போடும்சூழலைக் கொண்டே அவர்களை நம்பும் என்பதை,'பனை மரத்தடியிலிருந்து பாலைக் குடித்தாலும் அது கள்ளெனவே கூறும்' எனும் உலகவழக்கும் இதனை உணர்த்தும். கம்பரும் ஊர்வாய் மூட மூடி இல்லை என்பார்.

"தேரையார் செவ்விளநீர் உண்ணாப் பழிசுமப்பர்

நாரியார் தாம் அறிவார் நாம் அவரைத் நத்தாமை

கோரைவாய்ப் பொன்சொரியும் கொல்லிமலை நன்னாடா

ஊரை வாய்மூட உலைமூடி தான்இலையே"

சோழ மன்னரின் சால்வையை கம்பர் போர்த்தியிருந்ததால் மன்னன் என நினைந்து அரசியும் உடன் படுத்தார். அறியாமல் நிகழ்ந்த நிகழ்வுஇது இருவர் மனத்தும் களங்கம் இல்லை என்பதைச் சுட்ட கம்பர் பாடிய பாடலாம் இது (Kanniyappan, 2016). இதே சூழலைச் சந்தித்த பொய்யாமொழிப்புலவரும்,

"கட்டிளங் கணவன் கவின்பெறு சேக்கை

என்றறி மனைவி நெடிது துயில் கொளச்

செல்லக் கிடமி னெனக்கிடந் தருகெனச்

சொல்லிய நண்பன்"

நாம் மட்டுமல்ல நம்மைச் சார்ந்தவர்களும் நல்லவர்களாக இருப்பின் வாழ்க்கை நலமாகும் வளமாகும் என்பதையே இப்பாக்கள் உணர்த்துகின்றன. ஆனால் உலகம் அவ்வாறில்லை (Kanniyappan, 2016).

## ஒழுக்கமே உயர்வு-மிகை காமம் கடியத்தக்கது

குடும்பம், உறவுகளால் சூழப்பட்டதாயினும் இங்கும் தனிமனித ஒழுக்கமே முன்னிற்கின்றதாம். காமம் இயல்பே. சந்ததி உருவாக்கமே இதன் அடிப்படை. தாம்பத்யம் இனிதாயினும் காமம் கட்டுப்படுத்தப்பட வேண்டியதே எனும் கவி கடவுளர்களே மனையாள்களை மார்பிலும்(மார்பிலும்) இடப்பாகம் (சிவபிரான்) நாவில்(பிரமன்) என வைத்துள்ளமையின் ஆண்கள் காமுற்றுத்திரிவதில் தவறில்லை ஆனால் அதை அடக்கினாலே மனிதன் அதுவே நல்வாழ்வாம் இல்லையெனில் துயரே மிஞ்சுவதாம். இதனை இராமவதார இராமன் செயலோடும் கூறுவார் கவி காளமேகம். கடவுள் அவதாரமாயினும், பெண் மயலைக் கடத்தல் அரிதாம். இந்திரஜித் மாயா சீதையை வதைத்ததைப் பார்த்து அழுதவன்என இராமாயண நிகழ்வைச் சுட்டி,

"பித்தா னவன்றனையோ தெய்வமாகப் பிதற்றுவதே"

என்கிறார். இரட்டைப்புலவரும் மகளைக் கணவன் வீட்டிற்கு அழைத்துச் சென்ற தந்தை வழியில் மகளிடம் மெய்யின்பம் நுகர்ந்ததாகக் கூறக்காணலாம் (Kanniyappan, 2016).

"மாங்காட்டு வேளாளன் மகளை மருமகன்பால்

போம்காட்டில் இன்பம் புணர்ந்தானே! -ஆம்காணும்

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்

சொற்கேட்டல் இன்பம் செவிக்கு"

என கடிகின்றார். குலமகளை தனியாகத் தவிக்க விட்டு விட்டு தன் விருப்பப்படி வாழ்பவனைப் பேயும் அறையும் என்பார். பெண்ணின் ஒழுக்கக்கேடும் (ஒட்டக்கூத்தர், 348) தண்டனையும் (கம்பர், 306) பேசப்படுகின்றது (Kanniyappan, 2016).

## கணவனும் தாயும்

காமத்தை அடக்காவிடின் ஒருயிராய்ப் பிணைந்த உறவிலும் விரிசல் ஏற்படுவதை குழந்தை பிறந்தபின் ஆண் ஒழுக்க மாறுதல்நிலையைக் கவிகள் பலரும் சுட்டிச் செல்கின்றனர். கணவன் மனைவியாய்ப் பிரிவின்றி அன்புடன் வாழ்ந்தவர்கள் குழந்தை பிறந்த பின் தாய்தன் தாய்மை கடமையில் மூழ்க (568),

"ஏராட்டும் பூந்தொங்கன் மோகனக் காரற் கினியசுகம்

பாராட்ட நானினி யாளல்லவோ பசும் பொற்குழவி

தாராட்ட வுஞ்சங்கிற் பால்பிள்ளைக் கூட்டித் தடவிமஞ்சள்

நீராட்ட மையிடப் போமே யெனக்குள்ள நேரமுமே" (Kanniyappan, 2016)

தந்தையாம் கணவனின் ஆணுணர்வு மாறா அவலத்தை பலபட்டடை சொக்கநாதர் மேலும் கூறுவாராய்,

"அரும்பால காமுனம் பூமணஞ் சொற்பொரு ளாகமுயிர்

கரும்பாஞ் சுவையெள்ளும் போலொத்த காதலரைப்

பெரும்பாலி நல்லன்னஞ் கங்கா சலத்தைப் பிரிப்பதுபோல்

சுரும்பாம் புலவர் யமனாலை செக்கெனத்தோன்றினையே"

எனக் குழந்தையிடம் கூறுகின்றாள். தன் இல்வாழ்வே ஆட்டம் காணும் நிலை உருவாவதால் தாய்தன் குழந்தையைப் பார்த்து "பெரும்பாக் கியமல்லவோ மகனே உன்னைப் பெற்றதுவே"(554) என. சலிக்கவும் காணலாம். குழந்தை பிறந்தபின் மனையாள் வேம்பாவதை ஒப்பிலாமணிப் புலவரும் ஆண்டிக்குக் கிடைத்த அரும் பொருளாக, உள்ளங்கைத்தேனாக இனித்தநான் இப்பொழுது தாயானதால் உன்னால் வெறுக்கத்தக்கவளாகி விட்டேன் என்கிறார். அந்தகக்கவியோ, ஒருபடி மேலே சென்று விளக்குகின்றார் (Kanniyappan, 2016).

"முன்னாள் இருவருக்கும் யாக்கை ஒன்றாக முயங்கினமால்

பின்னாள் பிரியன் பிரியை யென்றாயினம் பேசலுறும்

இந்நாள் கொழுநன் மனைவியென் றாயினம் இன்னமும்ஓர்

சின்னாளில் எப்படி யோஐய நீஇன்றுசெப்புகவே"

என்கிறாள் மகனிடம் (Kanniyappan, 2016).

## பரத்தமை

செல்வமும் 'நான் ஆண் நான் என் விருப்பப்படியே இருப்பேன்' எனும் தன் முனைப்பும் பரத்தமையை உருவாக்கியது. 'மூவரைப் படுக்கைத் தாங்காது ஆகலின் பழையவரா லென்ன பயன்? (33.4)4 என நொந்த மனையாளோ,

ஒருவர்க்கு இடமாய படுக்கை இருவர்க்கென்றாயது கரிகாலன் நாட்டு புதுமையோவென நைகின்றாள் (Narayanavelupilai, 2010) தலைவன் பரத்தைமை நிலைத் தனக்குத் துயரைத் தருவதை' உன் மார்பில் எங்கையரின் போகநக அடையாளங்களால் என் மார்பு எரிவதால், உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றென்பதை நான் இன்றுதான் அறிந்தேன்' எனும் தலைவி கூற்று 'நீயாகியர் எம் கணவனை யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே' என்னும் சங்கப்பாடல்களிலும் எதிரொலிக்கக் காணலாம் (Narayanavelupilai, 2010). ஆணும் மாறவில்லைபெண்துயரும் மாறவில்லை. பாண்டிய மன்னன் பரத்தமையால் துயருறும் மனையாள்,

"வேண்டியபோது இன்பம் விளைக்கும் மடந்தையரைத்

தீண்டிய கையால் என்னைத் தீண்டாதே! -பாண்டியா

முல்லைக்கு அதிப முகம்பார்த்து அகலநின்று

சொல்லக் கடவஎல்லாம் சொல்" (Kanniyappan, 2016)

என்றும்,

"கலையால் முலைமூடி கண்வலைக்குள் ளாக்கும்

விலைமாதர் தாம்வர விட்டாரோ-விலைமாதர்

கொங்கையிலே தோய்ந்த குறைதீரத் துய்யசிவ

கங்கையிலே நீராடி வா (Kanniyappan, 2016)

என்றும் தன் வெறுப்பை, நடப்பை, அன்பை மொழிகின்றாள். ஆயினும் தவறிற்கு இரங்கி ஆண்வரின் மன்னிக்கும், ஏற்கும் பெருங்குணம் பெண்ணுக்கு வேண்டியதை,

"கோபம்தணி

பிழையொன்று இரண்டு பொறாரோ

குடியில் பிறந்தவரே"

இக்குணம்உள்ளதால் குடும்பம் சிதையாதாம் (Kanniyappan, 2016).

## இல்லறமும் இல்லாளும்

நல்மனையாள் வரம். ஆயின் அவளே குணமில்லாதவளாயின் அவளுக்குக் காட்டும் அன்பு, பணிவு யாவும் பயனில்லாததே. வாழ்வே வீண் என்னும் ஔவையார் அத்தகைய பெண்ணை மனையாளாகப் பெற்ற ஆணைப் பார்த்து

"சற்றேனும்

ஏறுமாறாக இருப்பாளே யாமாயிற்

கூறாமல் சந்நியாசங் கொள்"

என்று கூற, சிவப்பிரகாசரோ ஏனிந்த வம்பு திருமணமே தேவையில்லை என்கிறார் (Kanniyappan, 2016).

"நோய்கொண்டா லும்கொளலாம் நூறுவயதாம் அளவும்

பேய்கொண்டா லும்கொளலாம் பெண்கொள்ள லாகாதே"

என்கிறார். ஏனெனில் தம்பதியர் ஒற்றுமையே நல்குடும்பமாம். இதைத் திருமகள் கணவனும் நாமகள் கணவனும் நாளும் (480) மலர் சூடி வணங்கும் பெருமான் என்பதால் புனிதப்பயணங்களை மனையாளுடன் சேர்ந்தே செய்தல் வேண்டும் என்பதன் வழி உணராலாம் (Kanniyappan, 2016).

## இருமனையாள் நிலை

ஆணின் பரத்ததமை மட்டுமன்று அவனின் இருமனையாள் நிலையும் துயரே. ஒருவர்க்காய அன்பு இருவர்க்குமானால் 'கூடக் குறைவேயாகும்' இருமனையாள் நிலை ஆணுக்கு மகிழ்வைத் தருவதாகத் தோன்றினாலும் அது அவனுக்கும் இழிவே என்பதை கங்கை பற்றி உமையவள் பெருமானிடம் மாறி மாறி கேட்பதாக வரும் பாடலில் இறுதியில் குட்டு வெளிப்பட,

"நாணொடு வணங்கியென்

தன்பிழை பொறுத்திடு என்றே

சங்கரன்"

தலைகுனிவதாய் வரும் சிவப்பிரகாசர் பாடலும் உணர்த்தும். பெண்களிடமும் அது பிளவை உண்டாக்குவதை ஔவையார் பாடலும் (203) சக்களத்தி மேல் பழி போடுவதற்காக கணவன் இல்லாத நேரத்தில் அவன் விரும்பி வளர்த்த பலாமரத்தை வெட்டிய நிகழ்வும் சான்றாம் (Kanniyappan, 2016).

## சகோதர பாசம்

சகோதர உறவும் கிடைத்ததற்கு அரியதே. மறுபிறப்பில் உறவுகள் மாறும். எனவே அன்பில் பிணைந்தவர்களாக இருத்தலே அழகும் குடும்ப நலமுமாம். இதற்கு இராமன்-பரதன் - இலக்குமணன்உணர்வும் உறவும் சான்று. ஒரு தம்பி நாடாள, ஒருதம்பி காட்டிற்கும் உடன்வந்தான் என்கிறார் கம்பர் (Narayanavelupilai, 2010). ஆனால் பொறாமையால் ஒருவர்க்கு வெறுப்பு எற்பட்டு தீயனவே செய்யினும்,நன்மையே நினைக்கும் நல்மனமே உயர்வு என்பதைக் குமண வள்ளல் பாடல் உணர்த்தும்.தன்னை வெறுப்பவரையும் விரும்பும் அதிலும் நற்குணத்தையே காணும் பண்பே குடும்ப ஒற்றுமைக்கு அடிப்படையாக அமைவதைக் காணலாம்.தன் தலைக்கு விலை கூறிய தம்பியை நேசிக்கும் குமணன் தன் தம்பியை வெறுக்கவோ,இகழவோ செய்யாது தீமையிலும் நன்மையையே காண்கின்றார்.(465)

"வெம்புங்காலை வெதும்பி விழுஞ்சிரம்

செம்பொன் கோடிவிலை யெனச்சிந் தித்தான்

உம்பர் நாடு முலகினும் தேடினும்

எம்பி போல்எமக் கியாவர் உரியரே"

சகோதரர்கள் எவ்வாறு இருக்கக் கூடாது இருக்க வேண்டும் என்பது பற்றி அந்தகக்கவியும் (Kanniyappan, 2016),

"செஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்

பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே-விஞ்சு

விரதமே பூண்டிந் மேதினியை ஆண்ட

பரதனையும் இராமனையும் பார்"

என்கிறார். சகோதர்களுக்கிடையே போட்டியும், பொறாமையும் ஏற்பட்டால் அழிவு நிச்சயமே. இதனைக் காளமேகப்புலவரும் (Kanniyappan, 2016),

"வாலி மடிந்ததுவும் வல்லரக்கர் பட்டதுவும்

கோலமுடி மன்னர் குறைந்ததுவும்-சால

மதியுடைய நூற்றொருவர் மாண்டதுவும் ஐயோ சதவிகரத் தால்வந்த தாழ்வு" என்பார் (Kanniyappan, 2016).

## குடும்பமும் உறவுகளும்

குடும்பம் என்பதே உறவுகளால் சூழப்பட்டதுதானே? உறவுகளாய் வாழும் மனம் இறைவர்க்கும் உறவுகளை உருவாக்கியது. நான்முகன் மனைவி சரஸ்வதி, திருமால் மனைவி திருமகள் (142) சிவமகன் விநாயகன் (211) திருமால்மருகன், சிவமகன் முருகன் (229) திருமால் மகன் மன்மதன்(134) பலபட்டடை சொக்கநாதரும் உமையானவள் பாண்டியன் மகள் சிவபெருமான் மனைவி மட்டும்தாய் திருமால் தங்கை (543) என்பார். உறவுகள் இல்லையென்றால் வாழ்க்கை-உயிர்ப்பு இல்லையாம். ஆனால் தனியொரு உறவுகளின் குறை, செயல்கள் பிற உறவுகளைப் பாதிக்கவே செய்கின்றன. பிறப்பிலியாம் பெருமானுக்குத் தாய் தந்தை இல்லாதது குறையே பலரும் பழிக்க, இழிக்க இதுவும் காரணமென்கின்றனர்.

ஒவ்வொரு உறவுக்குமென தனித்தனி பண்புகள் ,இயல்புகள் உள்ளன . இதனை ஔவையாரும்,

"தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்

சேயோடு தான்பெற்ற செல்வம்போம்-ஆயவாழ்வு

உற்றா ருடன்போம் உடன்பிறப்பால் தோளௌவலிபோம்

பொன்தாலி யோடு எவையும் போம்"

என உறவின் சிறப்பைப் பெருமையை விளக்குவார். குடும்ப உறுப்பினர்கள் சரியில்லாவிடில் யாவும் ஆட்டம் கண்டுவிடும். தாய், தந்தை சகோதரன் தாய்மாமன் என எல்லோரும் இருந்தும் விநாயகருக்குப் பயனில்லை. அவருக்குப் யாரும் பெண் கொடுக்கவில்ல மட்டுமல்ல அவரை ஊரறிய எலி தூக்கிப் போனபோது (உலா) ஏன் யாரும் அதைத் தடுக்கவில்லை (Kanniyappan, 2016).

"மூப்பான் மழுவும் முராரிதிருச் சக்கரமும்

பார்ப்பான் கதையும் பறிபோச்சோ-மாப்பார்

வலிமிகுந்த மும்மதத்து வாரணத்தை ஐயோ

எலிஇழுத்துப் போகின்றதே ஏன்"

என நையாண்டியாகக் கேட்கின்றார் காளமேகம். விநாயகரின் பெரிய வயிறைக் தேவர்கள் இமைமூடாது விழித்தனர் வேலாயுதம் ஏந்திய முருகனோ துயரடைந்தான். சிவபிரானோ விடத்தை உண்டார் திருமாலும் அச்சமடைந்தான் பார்வதியும் சிவபிரான் உடலில் பாதியானாள் பிரமனோஉலகைப் படைப்பதும் வீணான செயலே என்று அன்னம் (உணவு, வாகனம்) இறங்காமல் அலைகின்றார் என்கிறார் காளமேகம் செய்வதறியாது நிற்கும் உறவுகளின் நிலையை இங்குப் பேசுகின்றார் (Kanniyappan, 2016).

## குடும்பமும் சொத்தும்

சொத்து தனக்குக் கிடைக்கும் வாய்ப்புள்ளது என்றால், அதை வாங்க எவரும் முன்வரும் நிலையை உலகியல் சார்த்தி பேசுவார் காளமேகம். திருவரங்கத்துவாழ் பார்ப்பனர்கள் விநாயகருக்கு திருமண் இட்ட நிகழ்வை கேலிசெய்வாராய் சொத்து விடயத்தைக் கையில் எடுக்கின்றார். தந்தை பிறப்பு இறப்பு இல்லாதவராதலின் (ஆதிஅந்தம் இல்லாதவன்) மாமனாம் திருமால் பல்முறை பிறந்தவராதலின்(அவதாரங்கள்)அவருக்கு சொத்து இருக்கும். அவரிடம் சென்றிருந்தால் தனக்கும் சொத்து கிடைக்கலாமென விநாயகர் அங்கு வந்து தங்கினான் என்கிறார். ஸ்ரீரங்கத்துப் பிள்ளையாருக்குத் திருநாமமிட்ட நிகழ்வைச் சுட்டும் பாடல் இது (106).

சுற்றம் புரத்தல் குடும்ப வாழ்வின் கடமை. ஆனால் சுற்றம் தவறு செய்தால் தண்டித்தலும் கடனேயாம். சிவபிரான் தன் உடம்பின் பாதியாய் அன்புக்குரியவளாய் மனையாள் இருந்தும், தவறு செய்தமையால் மாமனாராம் தட்சனைக் கொலை செய்தார் (50) கொடியவனாய தன்தாய்மாமன்

கம்சனைக் கண்ணன் (திருமால்) கொன்றார் (153). உறவுகள் என்பன நல்வாழ்வுக்குத்தான். அதற்கு மாறாய் இருந்தால் தண்டித்தலும் தவறில்லை என்பதையே இப்பாடல்கள் காட்டுகின்றன.

## இல்லார்க்கு வழங்கல்

தன்னை நாடி வரும் இல்லார்க்குத் தம்மால் இயன்றதை வழங்குவதும் குடும்பத்தார் கடனே. ஒருவர்க்கு அவரின் தேவையினை அறிந்து மனமுவந்து கொடுப்பது தாளாண்மை எனக்கு இது தேவை. தருவாயாக எனக் கேட்டபின் கொடுப்பது வண்மை பலமுறை நடையாக நடந்த பின் தந்தால் அது காற்கூலி பலமுறை சென்று கேட்டும் ஒருவன் பொருள் தராவிடில் அது சந்ததியையே அழித்து விடும் (234)என கொடையின் பலநிலைகளைப் பேசிய ஔவையார் இறுதியாக கேட்டபின்பும் தராவிடில் கொடாதவருக்குப் பிச்சையேற்கும் நிலையும் வரலாம் என்கிறார்.

"மேற்பார்க்க மைந்தரும் மூவாளருதும் விளங்கு கங்கை

நீர்ப்பாய்ச் சலும்நன் நிலமுமுண் டாகியும் நின்னிடத்தில்

பாற்பாக் கியவதி நீங்கா திருந்தும் பலிக்குழன்றீர்

ஏற்பார்க் கிடாலன் றோபெருங் கோயில் இறையவனே"

இல்லார்க்குப் பொருளை வழங்குபவர் பெருமை அளவிடற்கரியதாம்.அவர் பிறரால் தாயாய், தந்தையாய், குருவாய், தெய்வமாய், தலைவனாய்க் கருதப்படுவதுடன் புகழுக்கேஆதாரமாய் விளங்குவார் என்று (461) இரட்டைப்புலவர்களும் தன்னலம் பாராது பொருளை வழங்குபவன் நவரத்தினங்கள் போல் பத்தாவது மணியாயாக மதிக்கத்தக்கவன் (463) என சவ்வாது புலவரும் புகழ்வர். இல்லையென ஏங்குவதைவிட இருப்பதை மகிழ்வுடன் கொடுத்தலுக்குப் புலவருக்காய்த் தன் தலையையே வழங்கிய குமணவள்ளல்சான்று (463). அவர் பொருளே பொருளாம் மற்றையவெல்லாம் வீண்பொருளாம் (Kanniyappan, 2016).).

தனிமனிதர் எவ்வளவுதான் தகுதியுடையவராக. சிறந்து விளங்கினாலும் அவர்களின் சமுதாய மதிப்பு குடும்பம், சுற்றத்தினரின் தராதரத்தைப் பொறுத்தே அமையும் சமுதாயநிலையை முருகப்பெருமான் மீது சார்த்தி காளமேகர் கூறக் காணலாம். தந்தை சிவபெருமான் பிச்சையேற்பவர் தாயோ மலையில் வாழும் நீலீ தாய்மாமனோ வெண்ணெய் திருடுபவன் அண்ணன் விநாயகனுக்கோ சப்பைக் கால்கள் இத்தகு சூழலில் ஆறுமுகனுக்கென தனி பெருமை ஏதும் உள்ளதா என்கிறார்.

"அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி

ஒப்பரிய மாமன் உறிதிருடி-சப்பைக்கால்

அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்கு

எண்ணும் பெருமை இவை"

என்கிறார். விநாயகர் மணம் நிகழாமைக்கும் இது போன்றதொரு காரணத்தையே கூறியதை முன்பும் கண்டோம் (Kanniyappan, 2016).

## நாத்தனார் உரையாடல்

கணவர் சகோதரி நாத்தனார் உறவு பற்றிய கேலிப்பாட்டு ஒன்றும் உள்ளதாம்.நாத்தனார்-அண்ணி கேலியாய் நகையாடும் வழக்கை உமை-திருமகள் உரையாடலாய் சிவப்பிரகாசர் நயமாக விளக்குகின்றார்.கவுரியானவள் திருமகளிடம் ஈசன் இரந்து கொண்டு வந்த சோறிதுவெனக் காட்ட,திருமகளோ மண்ணே கண்டேன் என்கிறாள்.பெருமானுக்கு ஒர்எருது உளதென உமைகூற,திருமகளோ மாட்டை மேய்த்துக் கட்டும் கோனார் யாரென வினவுகிறாள்சிவபெருமான் ஒருதூது (பரவையார்) போனாரென உமைகூற, திருமகளோ இவர்போன தூதுகளைக் கூறின் மகாபாரதமாம் என்கிறாள்சிவபிரான் ஓட்டைத் திருடினாரென (திருநீலகண்டர் வரலாறு) உமைகூற,

திருமகளோ வெண்ணைத் திருட்டுக்காக உரலில் கட்டப்பட்ட கதைதான் தெரியுமே என்கிறாள்.பொதுவம்பலத்தில் நடமாடுவார் சிவபெருமான் எனக்கூற, இவர் (கண்ணன்) ஆடிய ஆடலை அரவமே அறியும் எனத் திருமகளும் உரைக்கக் காணலாம்(494). இவ்வாறு இருவரும் மகிழ்வுடன்(?) நகையாடுகின்றனர்.

## விருந்து

இல்லறத்தில் விருந்துபுறந்தருதல் முக்கியமான கடமையாம். சீதை சுந்தரகாண்டத்தும் (Narayanavelupilai, 2010) கண்ணகி கொலைக்களக்காதையிலும் (Sri Chandran, 2004) கூறும் கூற்றுகள் இங்கு நினையத்தக்கது. நற்குணவதியான மனையாள் இல்லையென்றால் அவ்வறம் பேணவியலா நிலையை ஔவையாரும், கணவன் பணிந்தும், அவட்கு சேவை செய்தும் அவள் விருந்துஒப்பா நிலையை,

"இருந்து முகந்திருத்தி ஈரோடுபேன் வாங்கி

விருந்து வந்ததென்று விளம்-வருந்திமிக

ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்

சாடினாள் ஓடோடத் தான்"

என்பார் (Kanniyappan, 2016). 'மதியாதார் தலைவாசல் மதியாமை' மட்டுமல்ல அன்பில்லார் இட்ட அன்னமும் விடமே. இதனை,

"என்பெல்லாம் பற்றி யெரிகின்ற தையையோ

அன்பில்லாள் இட்ட அமுது"

எனும் ஔவை வாக்கும் இதனை உணர்த்தும். அத்தகையவள் மானுட பெண்ணல்ல மரமே அவளை மனையாளாக அடையின் கூறாமலே சந்நியாசி ஆகலாம் (208). இது பெண்ணுக்கும் பொருந்துமன்றோ. பட்டமரம் போன்ற ஒருவனுக்கு நற்குணவதியான பெண்ணை மனையாளாக விதித்த பிரமனைக் கண்டால் சிவபெருமான் கொய்த ஐந்தாம் தலை தவிர்ந்த ஏனைய நான்குத் தலைகளையும் கிள்ளி எறிந்து விடுவேன் என சினக்கின்றார் (Kanniyappan, 2016).

வாங்குபவர் மனம் நிறைந்து போதும் என்று கூறும் ஒரேதானம் அன்னதானமே. கவிகளும் உணவின் சுவை, தருவார் அன்பின் நிலைகளுக்கேற்ப பல பாக்கள் பாடியுள்ளனர். அன்புடன் சுவையாக வழங்கிய விருந்திற்கு உலகையே தரலாம் (222) என்னும் ஔவையார் ,விருந்தில்லா வீடு வீணே (246) என்று பழிக்கவும் காண்கிறோம்.அன்புடன் தந்த பூசனிக்காய் கறி பற்றி காளமேகம் கூறுகையில் கொண்டத்தூர் அம்மை செய்த பூசனிக்காய் கறியைப் பார்த்தாலே கயிலாயத்தை அடைந்ததாகத் தோன்றும் உண்டால் அது மோட்சத்தையே தரும்.இது தேவர் அமுதே(132) என்றவர்,மோரில் நீர்தான் இருந்தது என்பதை கேலியாக,

"காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது

நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததன்பின்

வாரொன்று மென்முலையார் ஆய்ச்சியர்கை வந்ததன்பின்

மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே"

என்றவர், இன்னோர் இடத்தில்தண்ணீராய் ஓடிய கீரைக்கறியுடன் கல்சோறு வழங்கிய அம்மையை மனம் மறக்காது எனநோகின்றார் (Kanniyappan, 2016).

## தனிப்பாடல் திரட்டில் குடும்பம்

இயல்பான இலக்கியத்தை விட மாறுபட்ட இயல்பினை உடையன தனிப்பாடல் திரட்டுப் பாடல்கள். அவரவர் வாழ்வியல் சூழல்களுக்கு ஏற்ப பல சூழல்களில் பலர் பாடிய பாடல்களாதலின்,

வரையறைக்குட்பட்ட இலக்கியங்களை விட வேறுபட்ட பார்வையினை நாமிங்கு காண்கிறோம். வாழ்க்கையில் மனிதர்களை சூழல்களுக்கேற்ப செயல்படும் உணர்வுகளுக்கேற்ப வெளிப்படுத்தியுள்ளதால் நடப்பியல் நோக்காலான அனுபவங்களைக் காணலாம்.

குடும்பம் என்பது மனிதர்களின் இன்றியமையாத வாழ்வியல் முறை. திருமணம் குடும்பவாழ்வின் முக்கியமான நடைமுறை. இத்திருமணம் மனிதர்களின் சமுதாய மதிப்பினை நிர்ணயிக்கிறது. வேறுவகையில் கூறுவதானால், குடும்பத்தின் சமுதாய மதிப்பே திருமணத்தைத் தீமானிக்கின்றதாம். திருமண நிகழ்வு உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. கணவன், மனைவியின் அன்பும், பண்பும் வாழ்க்கையை, குடும்பத்தை இன்பமயமாக்குகின்றன. இவர்களின் இன்ப வாழ்வின் பயன் அவர்களுக்கு மட்டுமல்ல அவர்களைச் சார்ந்த உறவுகளுக்கும் தான். மனையாள் வரம். ஆனால் தவறாக அமைந்தால் அவ்வாழ்வை விட்டு துறவியாவது சிறப்பாம் குழந்தை, பேறாம். அதன் சொல், செயல்கள் எனயாவும் குடும்பத்தின் மகிழ்வே. குழந்தை வளர்ப்பில் பெரும்பகுதி தாயைச் சார்ந்ததே. அன்பில் தழுவும் தாய் குறை கண்டவிடத்து குழந்தையைத் தண்டிக்கவும் செய்கின்றாள். இது குந்தையின் நல்வாழ்வின் பொருட்டே. நல் மகள் வளர்ப்பு இன்னொரு குடும்த்தை உருவாக்குவது போன்றதாம். எனவே மகள் வளர்ப்பில் தாய் மிகவும் கவனமுடையவளாக இருக்கின்றாள். மகளின் செயல்பாடுகள் அக்குடும்பத்தின் சமுதாய மதிப்பையும் நிர்ணயம் செய்கின்றது. தனிமனிதனுக்கு ஒழுக்கம் முக்கியம். ஒருவரின் ஒழுக்கக்கேடு குடும்பத்தின் சமநிலையையே ஆட்டம் காணச் செய்து விடும். மனையாளை மதியாமை, இருமனையாள்நிலை, பரத்தமை, பெண்ணின் தவறான உறவுகள் போல்வ குடும்பத்தைச் சீர்குலைக்கும் செயல்களாம். அன்பும், பொறுமையும், விட்டுக் கொடுத்தலும் குடும்பத்தை காக்கும் பண்புகள். காமம் கடியத்தக்கது என்பதை மனிதர் உணர்ந்து செயல்பட வேண்டும். இல்லையென்றால் நன்மகவையே பழிக்கும் சூழல் உருவாகிவிடும். சகோதர உறவு அன்பை அடிப்படையாக் கொண்டால் வாழ்வு மேம்படும் பகையைக் கையில் எடுத்தால் அழிவும், பழியுமே கிடைக்கும். உறவுகளைப் பாதுகாத்தல் குடும்பக் கடமையானாலும், தவறுகள் செய்தால் தண்டித்தலும் அதனுள் அடங்குவதாம். விருந்து என்றால் புதுமையல்லவா...? பலரும் பல பாக்ககளில் விருந்து தருபவர் மாறுபட்ட மனநிலைகள், விருந்தின் சுவை, விருந்தின் சுவைகேடுகள் என்று பலவிதமாக மொழிகின்றனர். பணம், சொத்தை விரும்பாதவர் யாரும் இல்லை. இல்லாதவர்களுக்கு வழங்குதலே பொருளின் பயன். அதுவே உண்மையான பொருளாம். மனமகிழ்ந்து பொருளைக் கொடுப்பவர் கடவுளுக்கு சமம்.'ஆன (யானை) கொடுத்தாலும் ஆச(ஆசை)கொடுக்கரது'என்பது மலையாளப் பழமொழி. தன்னிடம் பொருள் இல்லையென்றாலோ, கொடுக்கும் மனநிலை இல்லையென்றாலோ அவர்கள் கேட்டதும் இல்லை, முடியாது என்று மறுப்பதே சிறப்பாம். அவர்களை பலமுறைவரச் செய்து ஏமாற்றுவது சந்ததிக்கே கேடாம்.

## முடிவுரை

தெய்வக் குடும்பம், மனிதக் குடும்பம் எனும் நிலையில் குடும்பம் பற்றிய செய்திகளைப் பலநிலைகளில் பேசுகின்றது தனிப்பாடல் திரட்டு. தன் வாழ்வின் சாயலை இறையிடம் கண்டாலும் வாழ்வின் முன் செயல்கள் (புராண நிகழ்வுகள் போல்வன) அவனிடம் பலவிதமாக வினா எழுப்பும் நிலையைக் காண்கிறோம். குடும்பம் இயல்பான வாழ்வானாலும் மனிதன் இயல்பிற்கேற்ப தனிமனித ஒழுக்கம், மன்னிப்பு, விட்டுக்கொடுக்கும் பண்பு, பிறரை அவர்களின் சூழல்களில், உணர்வுகளில் புரிந்து கொள்ளல், உயிர்கள் மீது கொள்ளும் தன்னலமற்ற அன்பு போல்வனவே நல்ல குடும்ப வாழ்விற்கான அடிப்படை இலக்கணம் என்பதையே இத்தனிப்பாடல் திரட்டுப் பாக்கள் உணர்த்துகின்றன.'ஒருவர் பொறை இருவர் நட்பு'என்பது குடும்ப வாழ்விற்கும் பொருந்தும் உண்மையாகும்.

## References

Bharathidasan, (1948) Kudumba Vilakku, Sentamil Nilaiyam, Trichy, India.

Kanniyappan, S. (2016) Thanipadal Thirattu, Mulai Nilaiyam, Chennai, India.

Narayanavelupilai, (2010) Kambaramayanam, Thirumagal Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigen, (2010) Kaalamegam Padalkal, Paari Nilaiyam, Chennai, India.

Sri Chandran, J. (2004) Aimperum Kappiyangal, Varththamaan Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License